# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**


# ஆண்டிறுதிப் பரீட்சை 2021

ஆண்டு: 7 திகதி: 20.11.2021

நேரம்: 2½ மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி. ச. பாலகங்காதரன்

மாணவர் பெயர்: ________________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 15 | |
| வினா 2 | 20 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 10 | |
| வினா 5 | 15 | |
| வினா 6 | 25 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 15 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் பகுதியை வாசித்து கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.**

## செத்தும் கொடுத்தார் சீதக்காதி

கொடைத்திறத்தாலும் நற்பண்புகளாலும் பேரும்புகழும் பெற்று மக்களால் வள்ளல் என்று புகழப்பட்டவரே செய்கு அப்துல் காதர் மரைக்காயர் என்பவர். அவரை ஊரார் அனைவரும் சீதக்காதி என்று அன்பாக அழைத்தனர்.

சீதக்காதி மரைக்காயர் தமிழ் மொழியோடு அரபு மொழியையும் கசடறக் கற்றுத் தேர்ந்தார். ஆனால், தமிழை உயிரெனக் கருதினார். அதனால், தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கத் தவறியதில்லை. அடக்கம், பொறுமை, நிதானம், நேர்மை, உண்மை ஆகிய நற்பண்புகளை அவர் உயிரினும் மேலாகப் போற்றினார்.

சீதக்காதி கப்பல் வாணிபத்தை வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டிருந்தார். அதில் ஈட்டிய பெரும்பொருளைக் கொண்டு ஏழை எளியவர்களின் வறுமைப்பிணியைப் போக்கி வந்தார். அதனால், அவரது கொடைத்தன்மை குன்றின்மேல் இட்ட விளக்குப்போல் பிரகாசித்தது. அவர் நாடாண்ட மன்னர்களாலும் போற்றிப் புகழப்பட்டார்.

தமிழ் மொழியில் பற்றுக்கொண்ட சீதக்காதி அதன் வளர்ச்சிக்குத் தன்னால் ஆனவற்றைச் செய்தார். புலவர்களைப் பெரிதும் ஆதரித்துப் போற்றினார். புலவர்களும் தம் பாடல்களால் அவரைப் புகழ்ந்து போற்றினர். தமிழ்ப்புலவர்களுள் ஒருவரான படிக்காசுப் புலவர் என்பவர் சீதக்காதியிடம் அளவு கடந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார். அவர், சிதக்காதியின் பேராதரவால் வாழ்ந்து வந்தார்.

ஒரு சமயம் நாட்டில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. வறுமைநோய் மக்களை வாட்டத் தொடங்கியது. சீதக்காதி தாம் தேடிய பொருள் அனைத்தையும் மக்களுக்காக அள்ளி இறைத்தார். அப்போதும் மக்கள் வறுமையிலிருந்து மீளவில்லை. மக்கள் வறுமையில் வாடுவதைத் தாங்கிக் கொள்ள இயலாத சீதக்காதி மனக்கவலையுற்றார். கவலையுற்ற அவரை நோய் வாட்டத் தொடங்கியது. அவர், ஆடி ஓய்ந்த பம்பரம் போல் ஆனார். இறப்பு தம்மை நெருங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்த வள்ளல் சீதக்காதி உற்றார் உறவினர்களை அழைத்து, ‘‘நான் மரித்ததும் என் கைவிரலில் உள்ள வைர மோதிரத்தைக் கழற்றாமலே புதைத்து விடுங்கள்.’’ என்று நயந்து வேண்டிக்கொண்டார். அவரைச் சார்ந்தவர்களும் அவ்வாறே செய்து முடித்தனர்.

வள்ளல்பெருமான் மாண்ட செய்தி கேட்டு அங்கு வந்த படிக்காசுப் புலவர் துக்கம் தாளாமல் துவண்டு போனார். அவர், சவக்குழியைப் பார்த்து, ‘‘வள்ளலே இனி புலவர்களை ஆதரிப்பார் யார்?’’ என்று கூறி வருந்தினார். அவ்வேளையில் சவக்குழி பிளந்து மோதிரம் அணிந்திருந்த விரல் மேலே வந்தது. அதைக் கண்ணுற்ற படிக்காசுப் புலவர், ‘‘செத்தும் என் வறுமையைப் போக்க உதவுகின்றீரே: நீர் அல்லவோ வள்ளல்பெருமான்.’’ என்று உள்ளமுருகப் பாடினார்.

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சீதக்காதி மரைக்காயர் உயிரினும் மேலாகப் போற்றிய நற்பண்புகளை எழுதுக.

2. சீதக்காதியின் கொடைத் தன்மை எப்படிப்பட்டது என்பதை எடுத்துக் கூறுக.

3. சீதக்காதி தமிழ் மொழியின்மீது பற்றுக்கொண்டவர் என்பதற்கு இரு காரணங்கள் தருக.

4. சீதக்காதி உற்றார் உறவினர்களிடம் நயந்து வேண்டிக் கொண்டது என்ன?

5. படிக்காசுப் புலவர், சீதக்காதி இறந்தபின்னர் வள்ளலே இனி புலவர்களை ஆதரிப்பார் யார் என வருந்தியபோது என்ன அதிசயம் நிகழ்ச்சதது?

| வினா இல | 2 | புள்ளிகள் | 20 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி ஐந்து சொற்களுக்குக் குறையாமல் வாக்கியங்கள் எழுதுக.**

1. தோசை

______________________________

______________________________

______________________________

2. அன்பு

______________________________

______________________________

______________________________

3. திருமணம்

______________________________

______________________________

______________________________

4. சிபிச்சக்கரவர்த்தி

______________________________

______________________________

______________________________

5. மோதிரம்

______________________________

______________________________

______________________________

6. கடற்கரை

7. வீரபாண்டிய கட்டபொம்மன்

8. காட்டுத் தீ

9. தமிழ்நாடு

10. நந்திச் சின்னம்

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் வாக்கியங்களை சேர்த்து எழுதுக.**

1. நான் நீலமலைக்குச் சென்றேன்.
நான் கம்பிவண்டியில் ஏறினேன்.
நான் அழகிய மலைக்காட்சியை கண்டு களித்தேன்.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

2. எனக்குத் தாகம் எடுத்தது.
நான் எனது பையைத் திறந்தேன்.
நான் போத்தலிலிருந்த தண்ணீரைக் குடித்தேன்.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

3. நான் தமிழ்ப்பளிளிக்குச் சென்றேன்.
நான் தமிழ் மொழியைக் கற்றேன்.
நான் தமிழ்ப்பண்பாட்டை அறிந்து கொண்டேன்.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

4. நான் தமிழ்க் கட்டுரையை எழுதினேன்.
நான் அதை அச்சிற் பதிப்பித்தேன்.
நான் அதை ஆசிரியருக்கு மின்னஞ்சல் செய்தேன்.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

5. அம்மா கடையில் பழங்கள் வாங்கினார்.
அவர் காய்கறிகள் வாங்கினார்.
அவர் வாசனைத் திரவியங்கள் வாங்கினார்.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**கீழேயுள்ள பந்தியில் பின்வரும் சரியான சொற்களைப் பாவித்து இடைவெளிகளை நிரப்புக.**

| | |
|---|---|
| கால்கள் | வளைந்து |
| துடுப்புகளும் | இருக்கும் |
| மீனை | நீந்திச் |
| குதிரைபோல | ஆபத்து |
| நிறத்தையும் | புழு |

**கடற்குதிரை**

கடற்குதிரை என்பது கடலில் வாழும் ஓர் அதிசயக் கடல் பிராணி. மீன்களைப் போலவே இதற்கும் செவுள்களும் ______________________ உள்ளன. இதன் தலைப்பகுதி குதிரையைப் போல ______________________. ஆனால் அதற்குக் ______________________ இல்லை. வால் ______________________ சுருண்டு இருக்கும். அது தண்ணீரில் இருந்தாலும் ______________________ போல நீந்துவதில்லை. அது நேராக நிமிர்ந்தே ______________________ செல்லும். அது பார்ப்பதற்கு ______________________ இருக்கும். கடற்குதிரை ______________________ வரும்பொழுது செடிகள் அல்லது பாறைகளுக்கு இடையில் ஒளிந்து கொள்ளும். அதன் ______________________ உடனே மாற்றிக் கொள்ளும். கடற்குதிரை ______________________ பாசி போன்றவற்றைத் தின்று உயிர் வாழும்.

| வினா இல | 5 | புள்ளிகள் | 15 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் கடிதத்தில் ஒன்றைத் தெரிவுசெய்து 60 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுக.**

1. கடந்த வருடம் உமது பிறந்தநாளை எப்படிக் கொண்டாடினீா் என்பது பற்றி உமது உறவினா் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.
2. நீா் சமைத்து மகிழ்ந்து உண்ட ஒரு பாரம்பரிய உணவு பற்றி உமது நண்பா் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

| வினா இல | 6 | புள்ளிகள் | 25 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் தலைப்புகளில் ஒன்றைப்பற்றி 125 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.**

1. நீங்கள் கலந்துகொண்ட ஒரு திருமணவிழா.
2. நான் படித்த கதையும் அதனால் நான் அடைந்த நன்மையும்.
3. விழா ஒன்றில் வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ் அரசன் ஒருவனைப் பற்றி உரையாற்றுமாறு கேட்கப்பட்டுள்ளீர்கள். அதற்காக நீங்கள் தயாரித்த பேச்சை எழுதுக.